

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் 23.11.2023 அன்று நடைபெற்ற விழாவில் ரூபாய் 1.21 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 11 கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, ரூபாய் 9.26 கோடி மதிப்பீட்டில் 67 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப்பேருரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மகளிர் திட்ட அலுவலர் ரமேஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.கங்காதாரணி, இலால்குடி ஒன்றியக்குழுத் தலைவர் தி.ரவிச்சந்திரன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஆர்.முத்துச்சசெழியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெ.ரவிச்சந்திரன், ஆ.ராஜ்மோகன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் க.வைரமணி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை தலைமைச் செயலகத்தில் ரூ.37.22 இலட்சத்தில்

# மேம்படுத்தப்பட்ட ஆண்கள்-பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.26-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் ரூபாய்.37.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்களைத் திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடங்களை புதுப்பித்திட வும் பழுதடைந்த தரைப்பலகை, மின் சாதனங்கள், கழிவறை சாதனங்கள், உடற்பயிற்சி உபகரணங்களை சீரமைத்து நவீனப் படுத்திடவும் மற்றும் கூடுதலாக டேபிள் டென்னிஸ் மேடை ஏற்படுத்திடவும் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில் ஆண்கள் உடற்பயிற்சி கூடம் ரூபாய்.17.8 இலட்சம் மதிப்பீட்டிலும், பெண்கள் உடற்பயற்சி கூடம் ரூபாய்.14.58 இலட்சம் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உடற்பயிற்சி உபகரணங்கள் சீரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி கூடத்தில் புதிதாக டேபிள் டென்னிஸ் விளையாட வசதியாக டேபிள் டென்னிஸ் மேடை அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய். 4.84 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சி கூடங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம்(24.11.2023) திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் கு. வெங்கடேசன், செயலாளர் சு.ஹரிசங்கர், இணைச் செயலாளர் (பொது) இரா. லெனின், இணைச் செயலாளர் [வி (ம) ப] அ. ஜீவன் மற்றும் பொருளாளர் சே. பிரபா ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பெரம்பலூர், குன்னம் தொகுதிகளுக்கு வந்த இளைஞர் அணி இரு சக்கர வாகன பேரணிக்கு

# மருதையான் கோவிலில் உற்சாக வரவேற்பு!

## குன்னம் சி.இராஜேந்திரன் தலைமை! அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ.26-

டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டை முன்னிட்டு, இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் இரு சக்கர விழிப்புணர்வு வாகன பிரச்சார பேரணி தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. கலைஞர் மண்டலத்திற்கு குன்னம், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகை தந்த பேரணிக்கு, குன்னம் சட்டமன்ற தொகுதி, மருதையான் கோவில் எனுமிடத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த பேரணியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், குன்னம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சி.ஆனந்த்குமார் ஆகியோர்

கலந்து கொண்டு அரியலூர் மாவட்டத்தில் இருந்து இரு சக்கர வாகனம் ஓட்டி வந்தனர்.

பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் இந்த பேரணியை வரவேற்றனர். குன்னம் வழியாக பெரம்பலூர் தொகுதிக்கு வந்த பேரணி தேசிய நெடுஞ்சாலையில் வாலிகண்டபுரம், திருமாந்துறை சுங்கச்சாவடி வழியாக கடலூர் மாவட்டத்திற்கு சென்றது. இதில் மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, வி.எஸ்.பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், ஒன்றிய செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி

துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல் கரீம், வ.சுப்ரமணி யன், மா.பிரபாகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டியில் உள்ள பூலாவரி கிராமத்தில் கழக கிளை அலுவலகம் முன்பு முன்னாள் தமிழக அமைச்சரும் சேலம் ஒருங்கிணைந்த தி.மு.க. மாவட்ட செயலாளருமான வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் நினைவு நாள் மற்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியுமான முரசொலிமாறன் ஆகியோர் நினைவு நாளையொட்டி அவர்களது திருவுருவப் படத்திற்கு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் தலைமையில் அமைதி பேரணியாகச் சென்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.பார்த்திபன், மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் தருண், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், முன்னாள் எம்.எல்.ஏக்.கள் தமிழ்ச்செல்வன், கோபால், பொதுக்குழு உறுப்பினர் மலர்விழி ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் ஆ. பிரபு, மேற்கு மாவட்ட துணை செயலாளர் சுந்தரம், முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி, பி.கே.பாபு ,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், ராணி, வக்கீல் குணா, ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமா சங்கர், மாதேஸ்வரன், ரத்தினவேல், டாக்டர் செழியன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, பழனிசாமி, பாலமுருகன், அழகுவேல், சித்தார்த்தன், ராஜேந்திரன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், சந்திரமோகன், வக்கீல் மனோகரன், முத்துலிங்கம், மதுசூதனன், பேரூர் செயலாளர்கள் முருகப் பிரகாஷ், பாலமுருகன், பாபு, வெங்கடேசன், ரவிச்சந்திரன், செல்வம், சுப்பிரமணி, காங்கமுத்து, சரவணன், ஊராட்சி மன்ற தலைவர் கோபால், சங்கர், மற்றும் குடும்பத்தினர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் ஜெயராணி மஹாலில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கூட்டுறவு சங்கங்களுக்கு டிராக்டர்களை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.சீனிவாசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் ஆய்வு! பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், நவ.26-

திருவாரூர் மாவட்டத்தில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் பணிகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீஆகியோர் உடனிருந்தனர்.

திருவாரூர் நகராட்சியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் வரி விதிக்கப்பட்ட அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தில் நகரில் உள்ள 30 வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி ரூ.78.15 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவருகிறது. பகிர்மான குழாய் மொத்த நீளம் 129.77 கி.மீ ஆகும். அதில் 59.90 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குழாய்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்றுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக வீட்டு இணைப்பின் மொத்த எண்ணிக்கை 15,965 ஆகும். அதில் 404 வீட்டிற்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்றுவருகிறது. மேலும், ஈ.வி.எஸ் நகரில் 6.00 இலட்சம் கொள்ளளவு, கே.டி. ஆர்.எஸ்டேட்ல் 5.00 இலட்சம் கொள்ளளவு, கொடிக்கால்பாளையம் 5.00 இலட்சம் கொள்ளளவு மற்றும் கிடாரங்கொண்டானில் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட 4 மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகள் கட்டப்பட்டுவருகிறது.

இந்த பணிகளை தமிழ்நாடு முதல்வர் முக. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளின்படி தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார். அப்போது பணிகளின் தரம் குறித்தும், பணிகளை விரைந்து முடிக்கவும் ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும் இந்த திட்டத்தின் கீழ் அம்மையப்பனில் 5 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தடைமட்ட நீர் தேக்க தொட்டி அமைக்கப்பட்டுவருகிறது. அம்மையப்பனிலிருந்து திருவாரூரிலுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு 8.70 கி.மீ. நீளத்திற்கு நீர் உந்து குழாய் அமைக்கப்பட்டுள்ளது. பணிகள்; 31.08.2024க்குள் முடிக்கப்பட்டு அனைத்து வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்படும்.

மேலும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறும் போது, தமிழ்நாட்டில் முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால் தமிழ்நாடு பல்வேறு துறைகளில் வியக்கத்தக்க வளர்சிகளை அடைந்துவருகிறது. மழை காலமாக இருப்பதால் திருவாரூர் மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வினை முதல்வர் அவர்களின் ஆலோசனைகளின் படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில பணிகள இன்னும் துரிதமாக முடிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த மாதாந்திர அறிக்கை முதன்முறையாக திருவாரூரில் கேட்கப்பட்டு தொடங்கப்பட இருக்கிறது. திருவாரூரில் விரைவில் தொழிற்பேட்டை அமைய நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது. அதற்காக மூன்று இடங்கள் ஆய்வில் இருக்கிறது .மகளிர் அதிகம் பயன்பெறும் வகையில் தொழில்பேட்டைகள் அமைக்கப் பட ஆலோசனைகள் நடைபெறுகிறது. சுற்றுச்சாலை கள் பணிகள் மிக விரைவாக நடைபெறும். பெரும் தொழில்கள் வளர குறுந் தொழில்களின் வளர்ச்சி மிக அவசியம் என்பதால் அதற்காக முதல்வர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். மாவட்ட தொழில் வளர்ச்சி கழகத்தின் சார்பில் தொழில் முனைவர்களுக்கு கடன் வசதி மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர்களுக்கு ஏற்படும் எந்த பிரச்சனைகளையும் அரசு உடனுக்குடன் தீர்த்து வருகிறது எனவும் குறிப்பட்டார்.

இவ்ஆய்வில்நகர்மன்றத் தலைவர் புவனப்பரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், வட்டாட்சியர் நக்கீரன், நகர் மன்ற உறுப்பினர் வாரை. எஸ்.பிரகாஷ், டி.செந்தில்,மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்இரா.சங்கர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில்

# திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணியினர் பெருமளவில் பங்கேற்பு!

## மாவட்டச் செயற்குழுவில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருப்பூர்,நவ.26-

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருப்பூர் ராஜாராவ் வீதியில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் 24.11.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

25.11.2023, 26.11.2023 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாம்களில் அதிக அளவில் புதிய வாக்காளர்களை பங்கு பெற செய்வது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

29.11.2023 அன்று புதுப்பாளையம் ஊராட்சி, வஞ்சிபாளையம் அருகில் தீரன் சின்னமலை மகளிர் கலைஅறிவியல் கல்லூரியை தமிழ்நாடு முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை யாற்றவுள்ளார்கள். இந்நிகழ்வில் கழக உடன் பிறப்புகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள்,மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொள்ள ஏற்பாடு செய்வது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

03.12.2023 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொடுவாய் விவேகானந்த வித்யாலயா பள்ளி அருகில் நடைபெற உள்ள இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கு பெறும் கூட்டத்தில் இளைஞர் அணியினரை திரட்டி கூட்டத்தை சிறப்புற செய்வது என இக்கூட்டத்தின் மூலம் தீரமானிக்கப்பட்டது. டிசம்பர் 17ம் நாள் சேலத்தில் நடக்கும் 2வது கழக இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு பெருந்திரளாக இளைஞர் அணியினரை திரட்டி செல்வது. பெரும் திரளாக கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்வது என்று இக்கூட்டத்தில்தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தொழிற் சங்க நிர்வாகிகள் கழக தொண்டர்கள், முன்னாள், இந்நாள் மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து ஏற்பாடு செய்வது என இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர்கள் ஜெக.வீரப்பாண்டியன், ஜெயபிரகாஷ், கே.ஆர்.என். போஸ், மாவட்டக் கழக நிர்வாகிகள் ப.செல்வம், ஆரூர்மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன், மு.லோகநாதன் மற்றும் பலர் உள்ளனர்.